**ஜூலை - 22**

**"நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார். நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்." - (சங் 34 : 18, 19)**

**"நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்." - நீதி 24 : 16**

தவறானதும், மீளக்கூடாததுமான ஒரு போக்கை நாம் எடுத்திருக்கிறோம் என்று எந்த நேரத்திலாவது நாம் கண்டால், கர்த்தர் முன்னறிவித்திருக்கிறபடி, அது ஏமாற்றங்களைக் கொண்டு வருவதை எதிர்பார்க்கலாம். ஆனால் அதன் மூலமாக சில ஆசிர்வாதங்களைக் கொண்டுவரவும் அவர் அனுமதிக்கலாம். அதன்படி நம்மில் நொறுங்குண்ட இருதயமும் கர்த்தரின் சார்பாகத் தாழ்மையும் ஏற்படும். வரும் நாட்களுக்காக மிகவும் அதிகமான ஆர்வத்தையும், விழிப்பையும், நம்பிக்கையையும் கொடுக்கும். இவ்விதமாக ஜீவியத்தின் சில தவறுகளும் கூட சத்தியத்தின் கிருபையின் உயர்ந்த நிலைகளுக்கு நம்மை அபிவிருத்தி செய்யும் சாதனங்களாகலாம். (படிக்கற்கள்) **- Z '03, 217 (R 3222)**

தோல்விகள் ஒருபொழுதும் நம்மை அதைரியப்படுத்த அனுமதிக்கக் கூடாது. அவைகள் நம்முடைய பலவீனத்தின் சான்றை நமக்குத் தெரிவித்தாலும் அவைகள் நமக்கு அதிகப் பிரயோஜனமாயிருக்கக்கூடிய போதனையையும் திருத்துதலையும் கொண்டுவருகின்றன. நம்முடைய பலவீனத்திற்கு எதிராக நாம் விழிப்புள்ளவர்களாய் இருக்க வேண்டும். தோல்விகள் நம்மில் இருந்தாலும் கர்த்தர் தம்முடைய இரக்கத்தையும், மன்னிப்பையும் தேவைப்படும் ஒவ்வொரு சமயத்திலும் தம்முடைய உதவியை செய்ய நமக்கு நிச்சயப்படுத்தி, நமது இருதயத்துக்கு ஆறுதலைக் கொடுக்கிறார். நாம் அதிசீக்கிரத்தில் அவைகளிலிருந்து எழுந்து, கர்த்தரின் நாமத்தில் சளைக்காமல் முன்னேற வேண்டும்.

**- P '26, 95.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**உபா 4:29-31; யோபு 22:29; சங் 51:17; 95:7,8; 147:3; நீதி 1:23; 28:13,14; ஏசா 57:15; 61:1-3; ஓசி 14:1,2; யோனா 2:4-9; மீகா 7:19; லூக் 18:10-14; யோவா 6:37; 15:7,17 - 24; யாக் 4:8; 1யோவா 1:9.**

**கோபுர வாசிப்பு : Z '13, 115 (R 5217)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் இடறி விழுந்தும், தவறியுமிருக்கிறேனா? அத்தகைய அனுபவங்களின் மத்தியில் எந்த மனநிலை என்ன? கர்த்தர் எவ்வாறு தமது சீர்திருத்தலையும், இரக்கத்தையும், உதவிகளையும் வெளிப்படுத்தினார்?**